**தலைப்பு 335 – தேசிய கல்வி ஆணைக்குழு**

---

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

தேசிய கல்வி ஆணைக்குழுவின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்றுடன்கூடிய 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் தேசிய கல்வி ஆணைக்குழுவின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2022 யூன் 15 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் அமைச்சிற்குரிய வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2022 யூலை 18 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தினை தவிர, 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் நிதிக்கூற்றுக்கள் தேசிய கல்வி ஆணைக்குழுவின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையில் 1.6 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்பட்டது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி.) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்புக்கள்**

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் ஆணைக்குழுவால் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் ஆணைக்குழுவின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியிருந்த அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின்போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு ஆணைக்குழுவின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதை மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும் மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றுக்களுடன் இணங்குவதாக,

(ஆ) முன்னைய ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் செய்யப்பட்ட பரிந்துரைகள் அமுல்படுத்தப்பட்டிருந்தன.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

**(அ) வைப்புக்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
| --- | --- | --- |
| ஆணைக்குழு அலுவலகத்தை பேணிச் செல்வதற்காக பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டப வளாகத்தை வாடகை அடிப்படையில் பெற்றுக்கொள்வதற்காக பிணை வைப்பாக இருந்த ரூபா 1,424,400 தொகையை 2021 ஆம் ஆண்டிற்குள் கணக்கிடப்பட்டிருக்கவில்லை. | அந்த அளவு முற்பணமாக செலுத்தப்பட்டிருந்ததால் தீர்க்கப்படாத முற்பணமாக தொடர்ந்து வருட இறுதியில் கணக்குகளில் மீதிகளாக காணப்படுகின்றமையால் பிணை வைப்பு 2021 ஆம் ஆண்டிற்குள் கணக்கிட்டுட்படுத்தாமல் இருப்பதற்கு தீர்மானிக்கப்பட்டதாக. | கட்டிட வாடகை பிணை வைப்புப் பணம் வாடகை மற்றும் வேலை முற்பணத்தின் கீழ் கணக்கிடப்பட வேண்டும். |

**(ஆ) ஆதனம், பொறிகள் மற்றும் உபகரணங்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| (i) 2021 ஆம் வருடத்தின் திசெம்பர் 31 ஆந் திகதியில் நிலையான உருப்படிகள் 03 க்கு CIGAS பதிவேட்டுடன் திறைசேரி அச்சை ஒப்பிடும் போது ரூபா 90,500 இல் இருந்து ரூபா 751,320 வரையான வீச்சில் வேறுபாடு காணப்படுகின்றது. | 2021 இல் கொள்வனவு செய்யப்பட்ட பொருட்களின் மொத்தம் திறைசேரியின் ஆரம்ப சொத்துக்களின் மொத்தத்திற்கு சேர்க்கப்பட்டிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டதுடன் அதை சீர் செய்யுமாறு திறைசேரிக்கு தெரியப்படுத்தி அனுப்பப்பட்டுள்ளது. அதை சீர்செய்வதற்கு தாமதமானதன் காரணமாக இந்த வேறுபாடு காணப்பட்டது. இந்த வருடத்திற்குள் திறைசேரியுடன் கலந்துரையாடி அந்தத் தவறை சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக. | CIGAS பதிவேடு மற்றும் திறைசேரி அச்சோடு இணங்கும் வகையில் நிலையான சொத்துக்கள் பதிவேடு பேணப்பட வேண்டும். |
| (ii) ஆணைக்குழுவினால் 2021 ஆம் ஆண்டிற்குள் கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 1,242,517 ஆன உபகரணங்களின் தொகை இறுதி கணக்கறிக்கையின் நிதி அல்லாத சொத்துக்கள் தொடர்பான கூற்றில் கொள்வனவுகளின் கீழ் (CIGAS கணக்குகளினுள்) உள்ளடக்கப்பட்டிருக்க வில்லை. | 2021 இல் கொள்வனவு செய்யப்பட்ட பொருட்களின் மொத்தம் திறைசேரியின் ஆரம்ப சொத்துக்களின் மொத்தத்திற்கு சேர்க்கப்பட்டிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டதுடன் அதை சீர் செய்யுமாறு திறைசேரிக்கு தெரியப்படுத்தி அனுப்பப்பட்டுள்ளது. அதை சீர்செய்வதற்கு தாமதமானதன் காரணமாக இந்த வேறுபாடு காணப்பட்டது. | கொள்வனவு செய்யப்படுகின்ற சொத்துக்களின் உருப்படிகள் அனைத்தும் நிதியல்லாத சொத்துக்கள் தொடர்பான கூற்றில் உள்ளடக்கப்பட வேண்டும். |
| (iii) 2021 ஆம் ஆண்டிற்குள் ஆணைக்குழுவினால் நீக்கப்பட்டிருந்த ரூபா 2,405,140 கிரயமான நிலையான சொத்துக்களின் பெறுமதி இறுதி கணக்குகளிலிருந்து நீக்குவதற்கு நடவடிக்கை மேற்கொண்டிருக்கவில்லை | அந்த நீக்கப்பட்ட பெறுமதியை 2022 கணக்குகளில் சீர் செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்வதாக. | நீக்கப்பட்ட சொத்துக்களின் பெறுமதிகள் நிதிக் கூற்றுக்களிலிருந்து நீக்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |

### 1.6.2 பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்பட்டிராமை

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கணனி, உதிரிப்பாகங்கள் மற்றும் மென்பொருள் தொடர்பான நிலையான சொத்துப் பதிவேடு | | |
| | 2002 நவம்பர் 28 ஆந் திகதிய ஐஏஐ/2002/02 ஆம் இலக்க திறைசேரி சுற்றுநிருபத்தின் பிரகாரம் கணனி, உதிரிப்பாகங்கள் மற்றும் மென்பொருள் தொடர்பான நிலையான சொத்துக்கள் பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை. | 2022 ஆம் ஆண்டிலிருந்து உரிய பதிவேட்டை தயாரிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாக. | திறைசேரி சுற்றுநிருபத்தின் பிரகாரம் கணனி, உதிரிப்பாகங்கள் மற்றும் மென்பொருள் தொடர்பான நிலையான சொத்துக்கள் பதிவேடொன்று பேணப்பட வேண்டும். |
| (ஆ) | பிணை பதிவேடு | | |
| | நிதிப்பிரமாணம் 891(i) இன் பிரகாரம் பிணை வைக்கப்பட வேண்டிய உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்களின் தகவல்கள் உள்ளடங்கிய பிணை பதிவேடொன்று தயாரிக்கப்பட்டிருக்க வில்லை. | 2022 ஆம் ஆண்டிலிருந்து உரிய பதிவேட்டை தயாரிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாக. | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் பிணை வைக்கப்பட வேண்டிய உத்தியோகத்தர் கள் தொடர்பான பிணைப் பதிவேடொன்று பேணப்பட வேண்டும். |
| (இ) | சேதங்கள் தொடர்பான பதிவேடு | | |
| | நிதிப்பிரமாணத்தின் 110 இன் பிரகாரம் சேதங்கள் தொடர்பான பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை. | 2022 ஆம் ஆண்டிலிருந்து உரிய பதிவேட்டை தயாரிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாக. | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் சேதங்கள் தொடர்பான பதிவேடொன்று பேணப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | பதிவு செய்யப்பட்ட விநியோகத்தர்களின் பதிவேடு<br>--------------------------------------------<br>2006 சனவரி 25 ஆந் திகதிய அரச பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 3.4.3 பிரிவின் பிரகாரம் பதிவு செய்யப்பட்ட விநியோகத்தர்களின் பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை. | 2023 ஆம் ஆண்டிலிருந்து பதிவு செய்யப்பட்ட விநியோகத்தர்களின் பதிவேட்டை தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் பதிவு செய்யப்பட்ட விநியோகத்தர் களின் பதிவேடொன்று பேணப்பட வேண்டும். |

**2. நிதி மீளாய்வு**
------------------------

**2.1 செலவின முகாமைத்துவம்**
--------------------------------------------

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | ஆணைக்குழுவின் நோக்கம் மற்றும் குறிக்கோளை நிறைவேற்றிக் கொள்வதற்காக மீளாய்வாண்டிக்காக ஒதுக்கப்பட்டிருந்த தேறிய ஏற்பாட்டின் செலவு விடயம் 04 இற்கு உரிய ரூபா 3,140,564 வை உபயோகப்படுத்தாமல் சேமிக்கப்பட்டிருந்ததுடன் அது தேறிய ஏற்பாட்டில் நூற்றுக்கு 20 இல் இருந்து நூற்றுக்கு 100 வரையான வீச்சில் உள்ளது. | 2021 ஆம் ஆண்டில் இடம்பெற்ற கொவிட் 19 நிலைமையின் காரணமாக ஏற்பட்ட தவரிக்க முடியாத காரணத்தின் அடிப்படையில் இந்த ஏற்பாடுகள் சேமிக்கப்பட்டிருந்தது. | ஒதுக்கப்பட்ட ஏற்பாடுகள் உச்ச அளவில் உபயோகப்படுத்து வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ஆ) | பரிபூரண மதிப்பீட்டின் ஊடாக ஒதுக்கப்படுகின்ற ஏற்பாடுகள் எவ்வித சந்தர்ப்பத்திலும் சேமிக்கப்படாமல் உரிய வேலைகளுக்கு முழுமையாக உபயோகப்படுத்தப்பட வேண்டி போதிலும் செலவு விடயம் 02 இற்கு உரிய மொத்தம் ரூபா 2,014,500 ஏற்பாடுகள் சேமிக்கப்பட்டிருந்ததுடன் அது நூற்றுக்கு 92 இல் இருந்து | 2021 ஆம் ஆண்டில் இடம்பெற்ற கொவிட் 19 நிலைமையின் காரணமாக பெறுகைகள் நடவடிக்கைகள் தாமதமாவதற்கு நேர்ந்ததும் கட்டளையிடப்பட்டிருந் பொருட்களை விநியோகிப்பதற்கு விநியோகத்தர்கள் தவறியிருந்தமையும் இந்த ஏற்பாடுகள் சேமிக்கப்பட்டதற்கு காரணமாக இருந்தது. | ஒதுக்கப்பட்ட ஏற்பாடுகள் உச்ச அளவில் உபயோகப்படுத்து வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | நூற்றுக்கு 100 வரையான வீச்சில் காணப்பட்டது. | | |
| (இ) | நிதிப்பிரமாணம் 50 இன் பிரகாரம் கணக்கீட்டு உத்தியோகத்தரினால் மதிப்பீடுகள் முடியுமான அளவில் முழுமையாக சரியாக தயாரிக்கப்பட்டுள்ளதாக மற்றும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் முறையான கவனத்துடன் மதிப்பீடு தயாரிக்கப் பட்டுள்ளதாகவும் விசேடமாக கவனிக்கப்பட வேண்டிய போதிலும் செலவு விடயம் 12 இன் ஆரம்ப மதிப்பீடு நூற்றுக்கு 25 இல் இருந்து நூற்றுக்கு 1000 வரையான வீச்சில் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தது. | 2021 ஆம் ஆண்டிலே மேற்கொள்வதற்கு இருந்த வேலைகளுக்காக வருட ஆரம்பத்திலே போதுமான அளவு பாதீட்டு ஏற்பாடுகள் கிடைக்காததன் காரணமாக இந்த ஆரம்ப மதிப்பீடு திருத்தங்கள் மேற்கொள்வதற்கு நேர்ந்தது. | மதிப்பீட்டை செயற்பாட்டு ரீதியாக தயாரிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |

**2.2 பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகளுக்கு உட்படல்**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| 2021 ஆம் ஆண்டிற்குரிய மொத்தம் 100,185 பெறுமதியான பொறுப்புக்கள் உருப்படி 06 2021 வருடத்தின் பொறுப்புக்கள் தொடர்பான கூற்றில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | தாமதப் பிழையொன்றினால் அந்த பொறுப்புக்கள் 2021 ஆம் கணக்கிற்குள் உள்ளடக்கப்படுவதற்கு முடியாது போனது. | கணக்குகள் காலப்பகுதிக்குரிய அனைத்து பொறுப்புக்களையும் அந்தந்த கூற்றில் உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**2.3 சட்டம், ஒழுங்கு, மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை**

| அவதானிப்பு | | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| சட்டம், ஒழுங்கு, பிரமாணம் ஆகியவற்றிற்கான கவனத்திற்கு | இணங்காமை | | |
| இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப் பிரமாணம் 1646 | 2021 ஆம் ஆண்டின் ஆணைக்குழுவிற்குரிய 3 வாகனங்கள் தொடர்பாக நிதிப் பிரமாணம் பிரகாரம் ஓட்டக் குறிப்புக்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை. | மேற்குறித்த வேலைகளை உரிய காலத்தில் நிறைவேற்றிக் கொள்வதற்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு உரிய உத்தியோகத்தர் களுக்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளதாக | உரிய நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் ஓட்டக் குறிப்புக்களை சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 முகாமைத்துவ வினைத்திறனின்மை**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| 2021 ஆம் ஆண்டில் ஆணைக்குழுவின் செயல் நடவடிக்கை திட்டத்தின் நோக்கங்களில் உள்ளடக்கப்பட்டுள்ள பிரதான செயல் நடவடிக்கை 03 இன் கீழ் காட்டப்பட்டுள்ள உப செயல் நடவடிக்கை 25 இல் உப செயல் நடவடிக்கை 08 மீளாய்வாண்டிற்குள் நடைமுறைப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | நடைமுறைப்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்த செயல் நடவடிக்கைகளுக்கு உரிய ஆரம்ப நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்ட போதிலும் அப்போது நிலவிய கொவிட் நிலைமை காரணமாக மற்றும் அடிக்கடி தோற்றுவிக்கப்பட்ட பயணக் கட்டுப்பாடுகள், தனிமைப்படுத்தப்பட்ட ஊரடங்கு சட்ட நிலைமை காரணமாக இந்த வேலைகள் தாமதமாக நேர்ந்தது. | திட்டமிடப்பட்ட வேலைகளை உச்ச மட்டத்தில் நிறைவேற்றுவதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியதுடன் நிலவுகின்ற நிலைமையின் கீழ் நடைமுறைப்படுத்த முடியுமான வேலைகளுக்கு உரிய செயல் நடவடிக்கைத் திட்டங்களில் திருத்தங்களை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 3.2 பெறுகைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
| --- | --- | --- |
| ஆணைக்குழு அலுவலக வளாகம் 10,000 சதுர அடியை உடைய, மாதாந்த வாடகை ரூபா 650,000 ஆன நுகேகொடையில் அமைந்துள்ள கட்டிடமொன்றில் செயற்பட்டுக் கொண்டிருந்தது. இருப்பினும், 2021 யூலை 1 ஆந் திகதியில் இருந்து மாதாந்த வாடகை 1,424,400 ஆன 4748 சதுரஅடியை உடைய பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டப வளாகத்தில் ஆணைக்குழுவின் அலுவலகம் தாபிக்கப்பட்டதன் காரணமாக வருடாந்தம் ரூபா 7,184,596 மேலதிக செலவொன்றை தாங்கிக்கொள்ள நேர்ந்துள்ளது. | தேசிய கல்வி ஆணைக்குழு இலக்கம் 126, நாவல வீதி, நுகேகொடை என்ற முகவரியில் அமைந்துள்ள கட்டிடத்தில் செயற்பட்ட போது முகங்கொடுப்பதற்கு நேர்ந்த பல்வேறு சிரமங்களின் காரணமாக மற்றும் அதிமேதகு சனாதிபதியின் தூர நோக்கத்திற்கு இணங்க அனைத்து அரச நிறுவனங்களும் அரச கட்டிடங்களில் தாபிப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு நிறுவன தலைவர்களுக்கு விடுக்கப்பட்ட வேண்டுகோளுக்கு இணங்க வேறு பொருத்தமான நிறுவன வளாகத்திற்கு இந்த நிறுவனத்தை செல்லல் தொடர்பான கவனத்தில் கொள்ளப்பட்டது. பின்னர் BMICH வளாகத்தை குத்தகைக்கு எடுப்பதற்கு காணப்படுகின்ற சந்தர்ப்பங்கள் தொடர்பாக தெரிந்து கொண்டமையினால் பழைய அலுவலக வளாகத்தில் முகங்கொடுப்பதற்கு நேர்ந்த பிரதானமான முரண்பாடுகளில்லாமல் அலுவலகத்தை நடாத்திச் செல்வதற்கு முடியுமாக உள்ளதன் காரணமாக BMICH வளாக அலுவலகத்தை தாபிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டதாக. | சேவை ஒப்பந்தங்களுக்கு முற்படும் போது சந்தையில் காணப்படுகின்ற போட்டித் தன்மையிலான விலை பேரேட்டுக்களை கவனத்திற் கொண்டு மிகவும் பயனுறுதி வாய்ந்த மற்றும் நன்மைகள் நிறைந்த சேவை ஒப்பந்தங்களுக்கு முற்படுவதற்கு முகாமைத்துவம் தீர்மானிக்க வேண்டும். |

## 4. நிலைபேறான அபிவிருத்திக்கான குறிக்கோளினை அடைந்து கொள்ளல்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
| --- | --- | --- |
| நிலைபேறான அபிவிருத்தி தொடர்பான ஐக்கிய நாடுகளின் 2030 ஆம் ஆண்டிற்கான நிகழ்ச்சி நிரல் தொடர்பாக நிறுவனம் அறிந்து கொண்டு ஆணைக்குழுவிற்கு உரியதாக்கிக் கொள்ள | நிலைபேறான அபிவிருத்தியின் நோக்கம் மற்றும் இலக்கை அடைந்து கொள்ளலை அளவிடுவதற்கான நிர்ணயம் உரித்தாவது இந்த கொள்கையை நடைமுறைப்படுத்தும் | ஆணைக்குழு கல்வி கொள்கைகளை தயாரிக்கும் வேலையை முதன்மையாக கொண்டு செயற்படும் |

| | | |
|---|---|---|
| முடியுமான நிலைபேறான அபிவிருத்தியின் இலக்கு மற்றும் நோக்கத்தை அடையாளங் கண்டிருக்கவில்லை. | நிறுவனத்தினாலேயே என்பதனால் இந்த நிறுவனம் தொடர்பாக சுட்டியை அடையாளப் படுத்திக் கொள்வது தேவையற்றதாக அவதானிக்கப்பட்டது. கொள்கைகளை தயாரிக்கும் வேலைகளில் இந்த நோக்கம் தொடர்பாக அவதானத்தை செலுத்துவதாக மேலும் கூறிக் கொள்கின்றேன். | நிறுவனம் என்பதால் நிலைபேறான அபிவிருத்தி இலக்கு மற்றும் நோக்கத்திற்கு அவதானம் செலுத்தப்பட வேண்டும். |

**5. நல்லாட்சி**

**5.1 உள்ளகக் கணக்காய்வு**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 40 பிரிவின் பிரகாரம் ஆணைக்குழுவின் உள்ளகக் கணக்காய்வு நடவடிக்கைகளுக்காக பிரத்தியேகமான அலகொன்றை தாபிக்காமல் கல்வி அமைச்சின் கீழ் கணக்காய்வு நடவடிக்கைகளை இடம்பெற்றுக்கொண்டிருப்பதுடன் மீளாய்வாண்டிற்குரிய கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ கூட்டங்கள் ஒரு தவணையில் மாத்திரம் இடம்பெற்றிருந்தது. | காணப்பட்ட சீரற்ற சுகாதார நிலைமையின் காரணமாக 2020 ஆம் ஆண்டுக்கான உள்ளக கணக்காய்வொன்றை மேற்கொள்வதற்கு முடியாது போனது என்பதாக. | வரைபு அமைச்சின் கணக்காய்வு பிரிவின் ஊடாக உள்ளக கணக்காய்வு பணிகளை நிறைவேற்றிக் கொள்வதற்கு அவதானம் செலுத்தப்பட வேண்டும். |

**6. மனிதவள முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| ஆணைக்குழுவின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணி திட்டத்தினுள் காணப்பட்ட கணக்காளர், வேலைத்திட்ட உத்தியோகத்தர் (நிதி) மற்றும் அபிவிருத்தி உத்தியோகத்தர் ஆகிய பதவிகளுக்கான வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படாமல் ஒரு வருடத்திற்கு மேலான காலத்தில் இருந்து பதில் கடமை நியமனங்கள் இடம்பெற்றிருந்தது. | அனைத்து ஆட்சேர்ப்புக்களையும் நிறுத்துமாறு மேற்கொள்ளப்பட்ட அறிவுரையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டதாக. | வெற்றிடங்கள் ஏற்பட்டவுடன் உடனடியாக ஆட்சேர்ப்பிற்கு அவதானம் செலுத்தப்பட வேண்டும். |